## மெட்ரோ பயணிகள் சாலையை கடக்க

# ஆலந்தூர் நடை மேம்பாலம் 2 வாரத்தில் திறப்பு

சென்னை, டிச. 12–

ஆலந்தூர் நடை மேம் பாலம் பயணிகள் வசதிக் காக 2 வாரத்தில் திறக்கப் பட உள்ளது.

### நடை மேம்பாலம்

ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் கடந்த 4 ஆண்டு களுக்கு முன்பு திறக்கப் பட்டது. ஆயிரக்கணக்கான பயணிகள் இந்த மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வந்து செல்கிறார்கள்.

மெட்ரோ ரெயில் நிலை யத்துக்கு வரும் பயணிகள் ஜி.எஸ்.டி. சாலையை கடக்க சிறிது தூரம் நடந்து சென்று அங்குள்ள சுரங்கப்பாதையை பயன்படுத்தி வந்தனர். இது மக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தி வந்தது.

### கோரிக்கை

இதனால் ஜி.எஸ்.டி. சாலையை பயணிகள் எளிதில் கடக்க வசதியாக அங்கு புதிய நடை மேம்பாலம் அமைக்க வேண்டும் என பயணிகளும், அப்பகுதி பொது மக்களும் கோரிக்கை விடுத்தனர்.

பயணிகளின் கோரிக் கையை ஏற்று அங்கு நடை மேம்பாலம் ரூ. 6 கோடி செலவில் அமைக்க மெட்ரோ ரெயில் நிறுவனம் முடிவு செய்தது. 'எஸ்கலேட்டர்' மற்றும் படிக்கட்டு வசதி களுடன் இந்த நடை மேம் பாலம் அமைக்கும் பணிகள் கடந்த ஆண்டு தொடங்கியது.

### 2 வாரத்தில் திறப்பு

இந்த நடை மேம்பாலம் அமைக்கும் பணி தற்போது முடிவடைந் உள்ளது. இன் னும் 2 வாரத்தில் நடை மேம் பாலம் திறக்கப்பட உள்ளது.

இது குறித்து மெட்ரோ அதிகாரி ஒருவர் கூறியதா வது:–

ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வரும் பயணிகள், பொது- மக்கள் ஜி.எஸ்.டி. சாலையை எளிதில் கடக்க வசதியாக ரூ. 6 கோடியில் நடை மேம் பாலம் 'எஸ்கலேட்டர்' படிக்கட்டு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு மழைநீர் கால்வாய், கழிவுநீர் வசதி பணிகள் நிறைவடைந்துள்ளது. இன் னும் 2 வாரத்தில் இந்த நடை மேம்பாலம் திறக்கப்படும்.

இதன் மூலம் மெட்ரோ ரெயில் பயணிகள், பொது மக்கள் எளிதில் ஜி.எஸ்,டி. சாலையை கடந்து செல்ல முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.